Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

நாகர்கோவிலில்
**புத்தாண்டு ஆசீர்வாத ஜெபம்**
ஜனவரி 8
(சனிக்கிழமை)
நேரம் : காலை 9.00 மணி முதல் மதியம் 1 மணி வரை
விஜயதா திருமண மண்டபம்
WCC ரோடு,
நாகர்கோவில்
அன்பரின் ஊழியம் : (0431) 2765386
செல் : 94889 08328 & 82203 17472



புத்தாண்டு செய்தி
**Rev.Dr.A.ஜாஷ்வா**

சென்னையில்
**உங்கள் ஆசீர்வாதத்தின் நாள்**
ஜனவரி 14
(வெள்ளிக்கிழமை
அரசு விடுமுறை)
நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1 மணி வரை
TGP திருமண மண்டபம்
இராஜாஜிரோடு
(நேஷனல் தியேட்டர் எதிரில்)
மேற்கு தாம்பரம் - சென்னை 45
அன்பரின் ஊழியம் : (0431) 2765386
செல் : 94888 45627

சென்னையில்
**தனி ஜெபம்**
இடம்: YMCA ரித்தர்டன் ரோடு,
வெப்பேரி, சென்னை
நேரம் : காலை 9 மணி முதல் 2 மணி வரை
மாலை 4 மணி முதல் 8 மணி வரை
ஜனவரி 26
(புதன்கிழமை)
தொடர்புக்கு :
(0431) 2765386
செல் : 97907 01873 &
77081 53666



பிரார்த்தனை **Dr. ஆனந்த ஸ்திரா**



புத்தம் புதிய நிகழ்ச்சி
**அனுதின அற்புதம்**
DAILY MIRACLE
MINISTRY OF JESUS
Youtube Channelல் காணத்தவறாதீர்கள்
தினமும் காலை 5 மணி
அற்புதங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்!

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்
## ANBARIN OOZHIYAM

மலர்:8 இதழ்:1 ஜனவரி 2022 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 8 ISSUE NO : 1 Janaury 2022 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-

# 2022

**தேவரீர்,...**

**நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்.**

**சங்கீதம் 90:15**



# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் பிரார்த்தனையினால் கர்த்தர் இயேசு செய்த மகத்துவமான அற்புதம்

## வெகு காலம் தடைபட்ட ஆசீர்வாதம் - சகோதரனுடைய ஜெபத்தை கேட்டு தேவன் இரட்டிப்பாக தந்தார்!



என் பெயர் கிஷோர் என் மனைவி மருத்துவர். ஐதராபாத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் கூட்டம் எப்பொழுது நடந்தாலும் அதில் என் அம்மாவும், நானும், என் மனைவியும், பிள்ளைகளும் கலந்துகொள்வோம். சகோதரர் தரும் நம்பிக்கையின் வார்த்தைகள், அவர்களிடத்தில் காணப்படும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எங்களை வெகுவாக தொட்டது. நான் நோய்வாய்ப்பட்ட பொழுதெல்லாம் சகோதரர் எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் எனக்கு பரிபூரண சுகத்தை தந்தார். மேலும், நல்ல சம்பளத்துடன் கூடிய வேலை திடீரென்று இழக்க நேரிட்டது. இழந்துபோன வேலையை விட அதிக சம்பளத்துடன் நல்ல கம்பெனியில் வேலை கிடைக்க கர்த்தர் தயை செய்தார். எனது அம்மாவிற்கு இருந்த பெலவீனமும் நீங்கி நல்ல சுகத்தை பெற்றார்கள்.

**சமீபத்தில் சகோதரர் அவர்கள் வெளியிடும் அன்பரின் ஊழியம் பத்திரிக்கை வந்தது. அதில் ஊழியங்கள் குறித்தும், அவர் ஏழை நோயாளிகளுக்காக கிராமப்புற மருத்துவமனை**

இதன் தொடர்ச்சி 22-ஆம் பக்கம் பார்க்க

- சகோ. கிஷோர், ஐதராபாத்




**வாழ்விலும், நிர்வாகத்திலும் நேர்மையாகவும், கண்டிப்பாகவும் செயல்பட்டவர்கள்.** எல்லாரையும் ஒன்றுபோல் நேசிப்பார்கள். **அவர்களுடைய கனிவான பேச்சு, தாழ்மையான அணுகுமுறை அனைத்து மக்களையும் கவரக் கூடியது.** எந்த பட்சபாதமும் காட்டாமல் அனைவரையும் நேசித்து ஜெபிப்பதுண்டு. அவர்கள் இறுதி நேரத்திலும் **"இயேசுவே உங்கள் கல்வாரி அன்பை இன்னும் எனக்குத் தாரும். உம்மை நான் இன்னும் அதிகமாக நேசிக்கவும் மற்றவர்களை நேசிக்கவும் உதவி செய்யும்"** என்ற ஓர் ஒப்பற்ற பிரார்த்தனையையே ஏறெடுத்தார்கள்.

**நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக் கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்... - 2 தீமோத்தேயு 4: 7, 8** என பரிசுத்த பவுல் சொன்னதுபோல என்னுடைய தந்தையும் இயேசுவுக்காக நல்ல போராட்டத்தைப் போராடி தன்னுடைய ஓட்டத்தை வெற்றியோடு முடித்து, **கடைசி வரை அவர்களை அழைத்தவர் மீது வைத்த விசுவாசத்தை காத்துக் கொண்டதினால் அவர்களுக்காக வைக்கப் பட்டிருந்த நீதியின் ஜீவகிரீடத்தை நீதியுள்ள நியாயாதி பதியாகிய இயேசுவினிடத்தில் பெற்றுக் கொண்டார்கள்.** இவ்வுலகத்தில் மாத்திரமல்ல, மறுமையிலும் இரவும் பகலும் அவரை சேவித்து சந்தோஷமாய் இயேசுவோடு வாழ்கிறார்கள்.

பக்தனாகிய யோபு சொன்னதுபோல **"என் மீட்பர் உயிரோடிருக்கிறார் அந்நிய கண்கள் அல்ல என் கண்களே அவரை காணும்"** என்ற வார்த்தையின்படி உயிர்த்தெழுதலின் நாளில் எங்கள் அன்பு தகப்பனாரை மீண்டும் சந்திப்போம் என்ற நிச்சயத்தை குடும்பத்தின் பிள்ளைகளாகிய எங்களுக்கும், உயிர்த்தெழுதலை விசுவாசிக்கிற அனைவருக்கும் கர்த்தர் தந்திருக்கிறார்.



Rev.Dr.A. அதிசயராஜ் ஐசக்
20.05.1941 - 20.11.2021

அன்பானவர்களே, நிச்சயமாக என் தந்தையினுடைய முன்மாதிரியான வாழ்வும், அவர்களின் சிறந்த பண்புகளும் உங்களுக்கும் பிரயோஜனமாகவும், ஆசீர்வாதமாகவும் இருந்திருக்கும் என கர்த்தருக்குள் நம்புகிறேன். **இப்படிப்பட்ட நல்ல தேவ ஊழியரை, போதகரை கர்த்தர் இந்த தேசத்திற்கு தந்ததற்காக கர்த்தரை துதியுங்கள். எந்த ஒரு குற்றமும் சாட்டப்படாத நல்ல தந்தையை கர்த்தர் எங்களுக்கு கொடுத்ததற்காகவும் அவர்களுடைய அருமையான நல்லதொரு வாழ்க்கைக்காகவும் நாங்களும் கர்த்தரை துதிக்கிறோம்.** தொடர்ந்து எங்கள் முழு குடும்பத்தின் ஆறுதலுக்காகவும், என் தந்தையின் ஜெபத்தின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை கர்த்தர் மாற்றி அவர்களையும் ஆறுதல்படுத்தும்படியாகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள். தேவ கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

உங்கள் அன்பு போதகர்
Rev.Dr.A. ஜாஷ்வா



# அன்பரின் ஊழியம்

மலர்: 8 ◆ ஜனவரி 2022 ◆ இதழ் 1

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

**இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் - வெளி. 21: 5**
**முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன் - ஏசாயா 43: 18,19**

உங்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் சமாதானமான, சந்தோஷமான அற்புதமான புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

தேவ ஜனமே! நாம் 2021-ம் ஆண்டு பலவிதமான இக்கட்டுகளை, சோதனைகளை, சோர்வுகளை, பயங்கரமான அழிவுகளை, எதிர்பாராத இழப்புகளை சந்தித்து கடந்து வந்திருப்போம். கடந்த ஆண்டு முழுவதும் பல நாடுகளில் வசிக்கும் மக்களுக்கும் ஒரு துயரத்தின் ஆண்டாகவே இருந்தது. **எனினும் இந்த புதிய வருடம் முழுவதும் தேவன் சகலவற்றையும் மாற்றி புதிதாக்கி வழி நடத்துவார். வனாந்தரங்களை வயல்வெளியாக்குவார், பாழான இடங்களை திரும்ப மகிமையாய் கட்டி எழுப்புவார். உங்கள் வாழ்க்கையின் வனாந்தரங்கள், கசப்பானவைகள், இயலாதவைகள் இந்த ஆண்டு இயேசுவின் நாமத்தில் மாறும், முடியும்.** சோர்ந்து போகாதீர்கள்! ஜெபத்திலே தரித்திருங்கள். பெரிய காரியங்களை காண்பீர்கள்.

இந்த ஆண்டில் ஜெபத்தை அதிகரிப்போம். நம்முடைய தனி ஜெபத்திலும், உபவாச ஜெபத்திலும், பொதுவான கூடுகைகளிலும் நாம் செய்யும் ஜெபம் மிகவும் உருக்கமாய், ஊக்கமாய் இருப்பதாக. நாம் கர்த்தருடைய சமூகத்தில் நம்முடைய கண்ணீரின் ஜெபத்தை உருக்கமாய் ஏறெடுக்கும் பொழுது அவர் கேட்பார். நம்முடைய விசுவாசமுள்ள ஜெபம் நிச்சயமாக இந்த பொல்லாத உலகத்தில் காணப்படும் அநீதிகளை அதம்பண்ணும் என்பதில் சந்தேகமில்லை. **(1 யோவான் 5:4)** எஸ்தர், மொர்தெகாயின் உருக்கமான ஜெபம் கொடுமை செய்தவர்களை அகற்றியது. அன்னாள், எலிசபெத்தின் ஜெபம் உறவினர்களின் மத்தியில் இருந்த பலிசொற்களை அகற்றியது. கர்த்தருக்கு பிரியமாய் உண்மையான வாழ்க்கை வாழ்ந்த பரிசுத்தவான்கள் செய்த உருக்கமான

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: (0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605 (24 மணி நேரமும்)
Telugu & Hindi : 99445 36343, Malayalam : 94889 32937, Kannada : 90031 17205
e-mail: info@mojindia.org website: www.ministryofjesus.in
முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

ஜெபத்தினால் அவர்கள் தேசங்களில் இருந்த கொடுமைகளை அகற்றி தேவன் நீதியை நிலைநாட்டினார் என்று சரித்திரம் கூறுகிறது. எனவே தொடர்ந்து ஜெபிப்போம்! மாற்றங்களை காண்போம்.

ஒவ்வொரு ஆண்டும் பல துக்கமான செய்திகளையே நாம் கேட்டு வருகிறோம். 2022-ம் ஆண்டிலும் நாம் சந்திக்க இருக்கும் போராட்டங்கள், புதியதாக உருமாற்றம் அடைந்த ஓமிக்ரான் வைரஸ் போன்றவற்றிற்காக கலங்காதீர்கள். விசுவாசத்தோடு ஜெபத்தில் தரித்திருங்கள். இதுவும் நம்மை விட்டு கடந்து போகும்.

இந்த ஆண்டில் கர்த்தர் நமக்குத் தந்த புதிய காரியங்களுக்காக ஜெபித்து அதை நிறைவேற்று வோம். தொடர்ந்து நாம் செய்கின்ற எல்லா ஊழியங்களுக்காகவும் அதிக ஊக்கமாய் ஜெபியுங்கள். கடந்த மாதத்தில் இயேசுவின் பிறப்பை நினைத்து ஊழியங்களுக்காகவும், SJ Saves Trust அறப்பணிகளுக்காகவும் ஜெபித்த, மனமுவந்து கொடுத்து தாங்கின அனைத்து தேவ பிள்ளைகளுக்காகவும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம். தொடர்ந்து தேவனுடைய ஊழியங்களை உதாரத்துவமாய் தாங்குங்கள். அன்பரின் ஆறுதல் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை பாருங்கள், மாதப் பத்திரிக்கையை படித்து பயன்பெறுங்கள். உங்கள் ஒவ்வொருவருடைய பாரங்களை இறக்கவும், உங்கள் சஞ்சலங்களை நீக்கவும் கண்ணீரோடு ஜெபிக்க நாங்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்கிறோம். சேர்ந்து ஜெபிப் போம்! கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்.

இந்த ஆண்டு முழுவதும் கர்த்தர் தாமே எல்லாவித பிசாசின் வல்லமைகளிலிருந்தும் விடுவித்து தமக்குள்ளாக உங்களை பலப்படுத்தி, சீர்ப்படுத்தி, நிலைநாட்டி உன்னத ஆசீர் வாதங்களை உங்கள் மேல் பொழிந்தருளுவாராக. என்ன நடந்தாலும், எது வந்தாலும் உங்கள் விசுவாசத்தை விட்டுவிடாதீர்கள். தேவனை எக்காரணம் கொண்டும் மறுதலிக்கவோ, அவரை விட்டு பின்வாங்கவோ வேண்டாம். உங்களது அநேக விண்ணப்பங்கள் இதுவரைக்கும் தேவனால் கேட்கப்படாதவைகளாக இருக்கலாம், கலங்காதீர்கள்! கர்த்தர் இந்த புதிய மாதத்தில் அந்த விண்ணப்பங்களுக்கு பதிலை தருவார். அற்புதங்களை காண்பீர்கள்!

## இம்மாத வாக்குத்தத்தம்

**சங்கீதம் 65:8-13**
**சகரியா 2:5**
**எண்ணாகமம் 6:24-26**
**அப்போஸ்தலர் 9:31**

## இதயம் தொட்ட எண்ணம்

**One touch is enough,**
**One word is enough,**
**One miracle is enough,**
**For a great transformation!**

**ஒரு தொடுதல் போதும்,**
**ஒரு வார்த்தை போதும்,**
**ஒரு அற்புதம் போதும்,**
**ஒரு பெரிய மாறுதலை காண!**

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 9500487061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 9500487061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.




தேன் துளிகள் குறுஞ்செய்தி Whatsapp No. 95975 55066

## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**ARADANA TV**
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**HARVEST TV**
சனி இரவு 07.30 – 08.00



# ஆறுதல்படுத்தும் தேவன்

புத்தாண்டு செய்தி : Dr. ஆனந்த ஸ்திரா

**தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும் – சங்கீதம் 90 :15**

அன்பான தேவ பிள்ளைகளே, அன்பரின் ஊழிய வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் முதலாவது எனது புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது. வருடங்களை நாம் கடக்க கடக்க இயற்கையாகவே நம்முடைய மனதில் ஒருவித கலக்கமும், பலவித எதிர்பார்ப்புகளும் ஏற்படுகிறது. சில சமயங்களில் எத்தனை வருடங்கள்தான் இந்த பாடுகளை அனுபவிக்க வேண்டும் என்றும், கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த புதிய வருடம் ஆசீர்வாதமாக இருக்குமா? நன்மையானதாக இருக்குமா? அல்லது இயற்கை சேதங்கள் அதிகமாக இருக்குமா? நம் வாழ்க்கையில் வெற்றியா அல்லது தோல்வியா எது வருமோ? என்று பலவிதமான கேள்விகள் உங்கள் உள்ளத்தில் உண்டாகலாம். சிலருக்கு சந்தேகங்களும், போராட்டங்களும் இதயத்தில் ஏற்படலாம். ஆகவே நம்முடைய இந்த கேள்விகளையும், நம் ஜெபங்களையும் அன்புள்ள பரிசுத்த பிதாவின் சமூகத்தில் வைத்துவிடுவோம். நிச்சயமாக அவர் நம்முடைய கவலைகளை நீக்கி, நம் கண்ணீரை துடைப்பார். நாம் எத்தனை வயதானவராக இருந்தாலும் தேவனுக்கு நாம் சிறு பிள்ளைகள் தான். அவர் தோட்டத்தில் மலர்கின்ற ரோஜாப் பூக்கள் நாம். எனவே கலங்க வேண்டாம்! தைரியமாய், விசுவாசமாயிருப்போம்! **கர்த்தர் நமக்காக பெரிய காரியங்களை செய்வார் (யோவேல் 2:21)**

இந்த ஆண்டிற்கான வாக்குத்தத்த வசனத்திற்காக அநேக நாட்கள் நான் தேவனுடைய சமூகத்தில் ஜெபத்தில் ஈடுபட்ட பொழுது கர்த்தருடைய ஆவியானவர் எனக்குக் கொடுத்த வசனம் தான் மேற்கூறிய வசனம். இந்த அருமையான வார்த்தை மோசே என்னும் மகா பெரிய தீர்க்கதரிசியினுடைய ஜெபத்தின் ஒரு வார்த்தையாகும். சுருங்க சொன்னால் இந்த அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களும் மற்றும் 14 முதல் 16 வரைக்கும் உள்ள வார்த்தைகள் நமக்கு மிகுந்த ஆறுதலை தரும் வசனங்களாய் காணப்படுகிறது.

மோசே என்றால் தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்டவன் என்று அர்த்தம். இன்னும் சொல்லப்போனால் சூரிய அருணோதயத்தின் கதிர்கள் நைல் நதியில் படும்பொழுது எகிப்து என்னும் பெரிய சாம்ராஜ்ஜியத்தின் ராஜாவான முதலாம் பார்வோனின் (பார்வோன் என்றால் சகலத்தையும் கெட்டுப்போகாமல் இருக்க பலவித மூலிகைகளால் பதப்படுத்தும்

தண்ணீருக்கு காசு வாங்குதல் என்று அர்த்தம். இவர்களின் ஒரிஜினல் பெயர் ராமசேஸ் அல்லது தட்மூஸ் ஆகும். தட்மூஸ் என்றால் நிலா கடவுளுக்கு பிறந்தவன் என்றும், ராமசேஸ் என்றால் சூரிய கடவுளுக்கு அர்ச்சனை செய்யும் தேவ புத்திரன் என்று அர்த்தம்) ஒரே ஒரு குமாரத்தி ஹெட்சாபுஸ் என்னும் ராணியால் நைல் நதி தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்டவன் தான் மோசே. அவன் பிறக்கும் பொழுதே மிகுந்த சௌந்தர்யம் உள்ளவனாக இருக்கிறான். அவன் தாயும், தகப்பனும் மகா பெரிய தேவனிடம் விசுவாசமாக இருக்கிறார்கள். அவர்கள் விசுவாசத்தின் பலனாக அடிமைகளை ஆட்கொண்ட ராஜாவின் அரண்மனையில் மோசே வளர்ந்தான். அதுவும் அல்லாமல் குறிப்பிட்ட சோதனையினால் (எகிப்தியனை கொன்றது) கர்த்தர் அவனை மீதியான் தேசத்திலிருக்கும் ரெகுவேலினிடத்திற்கு **(யாத். 2: 17)** அனுப்புகின்றார். அக்காலத்தில் மீதியான் தேசம் தேவனுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டிருந்தது. ரெகுவேல் என்றால் உன்னதமான தேவனுடைய மனிதன் என்று அர்த்தம். இவனுக்கு இன்னொரு பெயர் இருந்தது, அது தான் எத்திரோ **(யாத். 3:1).** எத்திரோ என்றால் மிகவும் உயர்த்தப்பட்டவன் என்று பொருள்படும். இவன் எபிரெயருடைய தேவனை அறிந்து அவரை சேவிக்கிற ஆசாரியனாக இருந்தான். ரெகுவேல், எத்திரோ என்கிற பெயர்கள் மீதியானுடைய பெயர் அல்ல. அது எபிரேயருடைய பெயர். எனவே கர்த்தர் மோசேயை சரியான இடத்திற்கு வழி நடத்தினார். மோசே சிறு வயது முதல் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு தேவ மகனாக, அநீதியான உலகப் பொருளில் ஆசைப்பட்டு சந்தோஷமாய் அதை அனுபவிப்பதை பார்க்கிலும் அடிமைகளாய் நொந்துபட்டு, கடினமான வேலை வாங்கப்பட்டு, அனுதினமும் கொலை செய்யப்படுகிற தேவனுடைய பிள்ளைகளை விடுவிக்க மிகவும் கண்ணீரோடு ஜெபிக்கிற தேவ தாசனாய் இருந்தான்.

மோசே தன் சகோதரர்களுக்காக துணை நின்று, எகிப்தியனை கொலை செய்ததின் நிமித்தம், எகிப்தை விட்டு தப்பி ஓடி, தனது 40-ம் வயது முதல் 50-ம் வயது வரைக்கும் வனாந்தரத்தில் ஆடுகளை மேய்க்கிறவனாய் வாழ்ந்தான். **சங்கீதம் 90:10-ல் எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே...** என்று மோசேயே கூறுகிறான் இது எத்தனை உண்மையான வார்த்தை பாருங்கள். உன்னதமான தேவனுக்கு முன் அவன் எதையும் மறைக்கவில்லை. இன்றைக்கும் பாருங்கள் நம் இந்தியாவில் எத்தனை பேர் 70 அல்லது 80 வயது தாண்டி வாழ்கிறார்கள். மிக மிக சொற்பமே. அதிலும் வனாந்தரத்தில் ஆடுகளை மேய்ப்பது எவ்வளவு கஷ்டம். இருந்தாலும் அவனுக்குள்ளே தன் ஜனங்களை விடுவிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு சற்றும் குறையவில்லை. தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்பி தொடர்ந்து இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறான். எகிப்தின் வாழ்க்கை முறை மற்றும் அவர்களுடைய பழக்க வழக்கங் களில் அவன் நம்பிக்கை வைக்கவில்லை. பூமியும் பர்வதங்களும் தோன்றுவதற்கு முன்னும், உலகத்தை உருவாக்குவதற்கு முன்னும் தலைமுறை தலைமுறையாய் தம்முடைய பிள்ளைகளுக்கு அடைக்கலமாய் இருக்கிற, ஆபிரகாம், ஈசாக், யாக்கோபின் தேவனிடத்தில் இந்த உருக்கமான ஜெபத்தை ஏறெடுக்கிறான். அவனுடைய தாழ்மையும், உண்மையான வாழ்க்கையும் காணக்கூடாத சர்வவல்லமையுள்ள தேவனை மிகவும் கவர்ந்தது. அதன் நிமித்தமாக தேவன் அவனோடு முகமுகமாக பேசினார் **(எண். 12:8; யாத். 33:1).** இந்த மாபெரும் தேவ மனிதன் செய்த ஜெபத்தையே நாம் இந்த வருடமும் ஏறெடுப்போம்.

## மோசேயின் உருக்கமான ஜெபம்

**"தேவனே! எங்களை சிறுமைப் படுத்தின நாட்களுக்கும் நாங்கள் துன்பத்தை கண்ட வருஷங்களுக்கும் சரியாக எங்களை மகிழ்ச்சியாக்கும்"** ஆம், கடந்த ஆண்டில் நாம் செய்த அக்கிரமங்களின் நிமித்தம் பலவித பாவங்களின் நிமித்தம் நாம் தேவனால் தண்டிக்கப்பட்டு இருக்கலாம், சிறுமைப்படுத்தப் பட்டு இருக்கலாம். எனினும், இந்த ஆண்டு கர்த்தருடைய அளவற்ற கிருபை நம்மேல் இரங்குவதாக! நாம் செய்த பாவங்களுக்காக, தவறுகளுக்காக அவர் சமூகத்தில் கண்ணீரோடு மன்னிப்பு கேட்கும்பொழுது அவர் நிச்சயமாய் நம்மை மன்னித்து மீண்டும் தூக்கி எடுப்பார். **(சங்கீதம் 103:9-13).** இதற்காக தான் நம் அன்புள்ள இயேசு கிருபையும், சத்தியமும் நிறைந்தவராய் உலகத்திற்கு வந்து நம் பாவங்களை போக்கும் தேவ ஆட்டுகுட்டியாக நமக்காக சிலுவையில் மரித்தார். தம்முடைய தூய இரத்தத்தையே சிந்தினார். எனவே அவருடைய இரத்தம் நம்மை பரிபூரணமாக கழுவி, வாழ்வில் உயர்த்தும். ஒருவேளை நீங்கள் நீதிமான்களாய் இருக்கலாம், உங்கள் குடும்பத்தில் அநேகர் நீதியின் வாழ்க்கைக்கு வராமல் இருக்கலாம். எனினும் அவர்களுக்காக ஜெபிப்போம். இந்த ஆண்டு கர்த்தர் நிச்சயமாய் நம் ஜெபத்தை கேட்பார். பெரிய இரட்சிப்பை உங்கள் மத்தியில் கட்டளையிடுவார்.

**சில வருடங்களுக்கு முன்பாக ஒரு அருமை தாய் தன் கணவருக்காகவும், தான் பெற்ற பிள்ளைகளின் மனந்திரும்புதலுக் காகவும் மிக உருக்கமாய் பல புண்ணிய தலங்களுக்கு பாதயாத்திரை செய்தார், தன்னை ஒடுக்கினார். அந்த தாய்க்கு இயேசு கிறிஸ்துவை பற்றி தெரியாது. அவளுடைய கணவர் அரசாங்க வேலையில் உயர் பதவியில் இருந்தார். எனினும், பலவித கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அவர் அடிமையாக இருந்தார். அவருடைய பிள்ளை களையும் அத்தகைய தீய பழக்கம் ஆட்கொண்டிருந்தது. இதன் நிமித்தம் அந்த பிள்ளைகளும், கணவரும் அந்த தாயை அதிகமாய் வெறுத்தார்கள். இந்த நிலையில் அந்த தாய் தற்கொலை செய்ய முயற்சித்தாள். அந்த நேரத்தில் அன்பரின் ஊழியத்தின் சார்பில் மிகப்பெரிய காண்பிரன்ஸ் நடப்பதை ஒருவர் மூலம் அறிந்து, அந்த கூட்டத்திற்கு வந்திருந்தாள். இருபதாயிரம் மக்கள் கலந்துக் கொண்ட அக்கூட்டத்தின் கடைசி வரிசையில் அழுது கொண்டு அமர்ந்திருந்தாள். அப்பொழுது கர்த்தர் தம்முடைய ஆவியான வரால் என் மூலம் அந்த பெண்ணை பெயர் சொல்லி அழைத்தார். "மகளே அழாதே! இன்று உனக்காக இரத்தம் சிந்தின தேவ ஆட்டுக் குட்டியானவர் பாவங்களை போக்கும் இரட்சகராக உன் வீட்டிற்கு வருவார், சகலமும் புதிதாகும். நீ சந்தோஷமாய் வாழ்வாய்" என்றார். அவ்வளவு தான் தன் கண்ணீரை துடைத்துக்கொண்டு புதிய நம்பிக்கையோடு அவள் வீட்டிற்கு சென்றாள். அங்கு கண்ட காட்சி அவளை திடுக்கிட வைத்தது. முதன் முறையாக அவள் கணவர் குடியிலிருந்தும், பலவித கெட்ட பழக்கங்களிலிருந்தும் விலகினவராக ஜெபம் செய்து கொண்டிருந் தார். கூட்டத்திற்கு வந்ததன் நிமித்தம் தன்னை அடிப்பார் என்று பயந்துக் கொண்டிருந்த அந்த சகோதரிக்கு மிகப்பெரிய அற்புதம் காத்திருந்தது. அவள் குடும்பத்தினர் அனைத்து தீய பழக்கங்களிலிருந்தும் விடுதலையாகி, இரட்சிப்பு என்னும் ஆனந்த மகிழ்ச்சியை அனுபவித்துக் கொண்டிருந் தனர். ஆம். துன்பத்தை கண்ட வருஷத்திற்கு சரியாக அவர்கள் நன்மையை கண்டனர். இதுதான் மோசேயின் ஜெபத்தை நாம் ஏறெடுக்கும் பொழுது நடக்கின்ற சம்பவம்.**

## அதிகாலை ஜெபம்

அதிகாலையில் நாம் எழுந்து **"சர்வ வல்லமையுள்ள தேவனே! பரமண்டலங்களில் இருக்கிற பிதாவே! அடிமைகளாகிய எங்கள் மேல் கிருபையாயிரும்"** என்று நாம் ஒவ்வொரு நாளும் கேட்கும்பொழுது **அவருடைய காருணியம் நம்மை பெரியவனாக்கும். (சங்கீதம் 18:35)** தேவனுடைய அளவற்ற கிருபை மோசேயை போல மிகுந்த தாழ்மை, சாந்த குணமுள்ளவர்களுக்கே கிடைக்கும். அதுமாத்திரமல்ல, தேவனை பற்றி அதிகமாய் அறிய விரும்புகிறவர்கள் மேலும் அவருடைய கிருபை அதிகமாக இருக்கும். **உம்மை அறிந்தவர்கள்மேல் உமது கிருபையையும், செம்மையான இருதயமுள்ளவர்கள்மேல் உமது நீதியையும் பாராட்டியருளும் - சங்கீதம் 36: 10**

## தேவனை நம்புகிறவர்கள்!

தேவனை அதிகமாக நம்பி வாழ்கிறவர்கள் மீதும், தாழ்மையுள்ளவர்கள் மீதும் அவருடைய கிருபை அதிகமாக இருக்கும். அபிஷேகம் பண்ணப்பட்ட தேவ பிள்ளைகள் மீது அவருடைய கிருபை அதிகமாயிருக்கும் **(சங்கீதம் 89: 20-24)** வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் அவருடைய கிருபை ஒருபோதும் ஒழிந்து போகாது. **சங்கீதம் 136ன்படி** கர்த்தருடைய அளவற்ற கிருபை பெரிய அதிசயங்களை நமக்குச் செய்யும். நம்மை துன்புறுத்துகிற பகைஞர்களிடமிருந்து விடுவிக்கும். அவருடைய கிருபை நம்முடைய தாழ்விலிருந்து உயர்த்தி உன்னதங்களில் வைக்கும். நாம் எத்தனை படித்திருந்தாலும், எவ்வளவு பெரிய உத்தியோகத்தில் இருந்தாலும், எவ்வளவு தான் செல்வந்தராக இருந்தாலும் பெருமைப்படக் கூடாது. தேவனுடைய பார்வையில் நாம் சீக்கிரமாய் மறைந்து போகிற நிழல் என்றும், மண் என்றும் நினைவு கூற வேண்டும்.

என்னுடைய சம்பந்தி போதகர் **திரு.அதிசயராஜ் ஐசக்** அவர்கள் உண்மையான ஒரு மிஷனரி போதகராக இருந்தார். கர்த்தருடைய ஊழியத்தில் அவர்கள் பட்ட பாடுகளுக்கு அளவே இல்லை. அக்காலத்தில் போதகர்களுக்கு மிகக்குறைவான சம்பளம் தான். ஆனால், கடினமான வேலைகளும், எதிர்ப்புகளும் இருக்கும். அதின் மத்தியிலும் பல நற்செய்திக் கூட்டங்களை ஒழுங்கு செய்து, உண்மையாக தேவனால் பயன்படுத்தப்படுகிற ஊழியர்களை தைரியமாக அழைத்து, பாரம்பரிய கிறிஸ்தவ சபைகளில் பெரிய எழுப்புதலை ஏற்படுத்தினார்கள், ஆலயங்களை கட்டினார்கள். அவர் எப்போதும் பேர், புகழை எதிர்பார்த்தது இல்லை. அதற்கு மாறாக சங்கீதக்காரன் சொல்வது போல **"எங்களுக்கு அல்ல கர்த்தாவே எங்களுக்கு அல்ல உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்"** என்று நெடு முழங்காலில் நின்று கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செய்வார்கள். கர்த்தருக்காக எவ்வளவு பெரிய காரியங்கள் செய்திருந்தாலும், தனது பெயரை கற்பலகைகளில் பொறிக்கக் கூடாது என்று கூறிவிடுவார்கள். இன்று அவர்கள் மகிமையான கர்த்தருடைய பிரசன்னத்தில் களிகூருகின்றார்கள்.

ஆம் எனக்கன்பானவர்களே! தாழ்மைப் படுங்கள் அப்பொழுது சர்வ வல்லமையுள்ள கர்த்தர் மோசேக்கு தென்பட்டது போல உங்களுக்கும் தென்படுவார். மோசேயின் மூலம் 430 ஆண்டுகள் அடிமைகளாக இருந்த தம்முடைய மக்களை பலத்த அற்புதங்களாலும், அதிசயங்களாலும் விடுவித்தார். அநீதியாக கொலை செய்யப்பட்ட தம்முடைய மக்களுக்காக கர்த்தர் யுத்தம் செய்தார். இதுவரைக்கும் எந்த மனிதனாலும் செய்ய முடியாத, ஒரு சாதாரண மேய்ப்பனின் கோலால் பெரிய சமுத்திரத்தை இரண்டாக பிளந்தார். உலக சரித்திரத்தை பார்க்கும் பொழுது என்றைக்கு மனிதன் தன்னை உன்னதமான தேவனுக்கு நிகராக எண்ணி

னானோ அன்றைக்கே அவனுக்கும், அவனோடு சேர்ந்த பெருமைக்காரருக்கும், கொடூர காரருக்கும் தேவனால் அழிவு வந்ததை நாம் பார்க்கிறோம்.

சரித்திரத்தை சற்று திருப்பி பாருங்கள். 14வது நூற்றாண்டில் ஒரு குறிப்பிட்ட திருச்சபையின் விசுவாசிகளால் உயர்த்தப்பட்ட தலைவரே, பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க கையெழுத்து போடும் அதிகாரத்தை பெற்றவர் என்று நம்பினார்கள். பரலோகத்தின் தந்தை யோடு வாழ அவர் மாத்திரமே பரலோகத்திற்கு சீட்டு கொடுக்க முடியும் என்று பெருமைப் பட்டார். ஜனங்கள் அவரை தேவ பிறவியாக எண்ணினார்கள். பல நாடுகளின் அரசர்கள் அவரை பணிந்தார்கள். இதன் நிமித்தமாக தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுகிற சிறுபான்மையான கிறிஸ்தவர்கள் எங்கும் துரத்தப்பட்டு கொடுமைக்கு உள்ளானார்கள். அநேகர் அநியாயமாக தீக்கொழுத்தப்பட்டு கொலை செய்யப் பட்டார்கள். **(ஏசாயா 42:8)** என்றும், அப்படி மனிதன் தேவ மகிமையை திருடும் பொழுது **"கர்த்தர் பராக்கிரம சாலியைப்போல் புறப்பட்டு, யுத்த வீரனைப் போல் வைராக்கிய மூண்டு, முழங்கிக் கர்ச்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்" (ஏசாயா 42:13)** என சர்வ வல்ல தேவன் கூறுகிறார். நடந்தது என்ன? திடீரென்று அவர் ஆட்சி செய்த நாடுகளை எல்லாம் **"கருப்பு மரணம்" (Black Death)** என்னும் கொள்ளை நோய் நான்கு வருடமாக வாட்டி வதைத்தது. சுமார் 20 கோடி மக்கள் கேட்பாரற்று மரித்துப் போனார்கள். இதன் காரணமாக அநேக மக்கள் அந்த தலைவரை எதிர்த்தார்கள். அவர்களே தேவனை உண்மை யோடும், ஆவியோடும் வழிபட ஆரம்பித் தார்கள். இது உண்மையாக நடந்த சரித்திரம்.

அதேபோல, அவ்வப்பொழுது உலகிலுள்ள மிகப்பெரிய பேரரசர்களுடைய கொடுமையான ஆட்சிகள் சர்வவல்ல தேவனுடைய தராசில் நிறுத்தப்பட்டு, குறைவாக காணப்பட்டு ஒரே ஒரு நாளில் கர்த்தருடைய தூதர்களால் சங்கரிக்கப்பட்டிருக்கின்றன. எனவே நாம் பயப்படவேண்டாம். நம்மை தாழ்த்தி ஒருமனப்படுவோம். கர்த்தர் நமக்காக பெரிய காரியங்களை செய்வார். **(யோவேல் 2:21)** கடைசியாக, மோசே தேவனை நோக்கி, **எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக; எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும். சங். 90:17** என்று அழுது ஜெபிக்கின்றான்.

## தேவனுக்கு பிரியமானவர்கள்!

கிறிஸ்து இயேசு உலகில் பிறந்தபொழுது தேவ தூதர்கள் இயேசுகிறிஸ்துவால் மனுஷர் மேல் பிரியம் உண்டாவதாக என்று பாடி னார்கள். அதேபோல இயேசு ஞானஸ்நானம் பெற்ற பொழுது பரிசுத்த ஆவியானவர் புறாவை போல காட்சியளித்து **"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்"** என்று கூறுவதை பார்க்கிறோம் **(மத்தேயு 3:11; மாற்கு 1:11).** அதேபோல அவர் மகத்துவமான தேவ குமாரனாக உயர்ந்த மலையின் மேல் (ஜெபிக்கும்பொழுது, மறுரூபமாகும் பொழுது) உன்னதத்திலிருந்து தேவனுடைய சத்தம் கேட்கிறது. அதில் கர்த்தர் இயேசுவை பார்த்து **"இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்" (மத்தேயு 17:5)** என்ற அருமையான தேவனின் உறுதிமொழியையும் பார்க்கிறோம். பிதாவாகிய தேவன் அவர் மேல் பிரியமாய் இருந்தபடியால் இயேசுகிறிஸ்து உலகில் யாரும் செய்யாத பலத்த அற்புதங் களையும், அதிசயங்களையும் செய்தார். அதேபோல உலகப்பிரகாரமான கேளிக்கை

களிலிருந்தும், களியாட்டுகளிலிருந்தும், லௌகீக காரியங்களிலிருந்தும் தேவ கிருபையால் தன்னை விடுவித்து, பலத்த ராஜாக்களுக்கு முன் சாட்சியாக விளங்கின தானியேலை கர்த்தருடைய தூதன் பார்த்து **"நீ தேவனுக்கு பிரியமானவன்"** என்று அழைப்பதை நாம் பார்க்கிறோம் **(தானியேல் 9:23; 10:11)** அதேபோல மோசேயை கர்த்தர் பார்த்து **"இவன் எனக்கு உயிருக்கு உயிரான சிநேகிதன்"** என்கிறார்.

ஆம் பிரியமானவர்களே! இன்றைக்கு கர்த்தராகிய தேவன் எங்கள் மேல் பிரியம் வைத்தபடியால் தான் நாங்கள் ஒவ்வொரு அற்புதத்தையும் இயேசுவின் நாமத்தில் கண்ணீர் வடிக்கிற, நொந்துபோன மக்கள் மத்தியில் செய்ய முடிகின்றது. "சமீபத்தில் ஒரு இளம் பெண் கர்ப்பம் தரித்தாள். அவள் ஐந்து மாதமாக இருக்கும் பொழுது Multiple Anomalies (மூளை, இதயம், சிறுநீரகங்கள், கல்லீரல், குடல்கள் அனைத்தும் செயலற்றுப் போன நிலை) குழந்தையின் உறுப்புகள் சரியாக வளராது காரணத்தினால் குழந்தைக்குரிய உருவம் இல்லை என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். மருத்துவர்கள் உடனடியாக கருவை கலைக்க வேண்டும் என அறிவுறுத்தினர். அவர்களுக்காக என்னுடைய ஆவிக்குரிய மகன் ரெய்மன்ட் ஜெபித்தார்கள். தொடர்ந்து அவர் என்னை தொலைப்பேசியில் தொடர்புக் கொண்டு ஜெபிக்கும்படி கூறினார்கள். ஜெபத்திற்கு பிறகு கர்த்தர் அற்புதம் செய்தார். அனுபவம் பெற்ற மகளிர் மருத்துவர் பரிசோதனை செய்த பொழுது குழந்தைக்கு எல்லா உறுப்புகளும் எப்படி வந்தது என கூறி ஆச்சரியப்பட்டனர். எனவே கருவை கலைக்க வேண்டாம் என்று கூறிவிட்டார். பாருங்கள்! ஒரு நிமிட ஜெபத்தில் கர்த்தர் எவ்வளவு பெரிய அற்புதத்தை செய்கின்றார். இது நம்மால் உண்டானதல்ல. நமக்காக சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்த அன்புள்ள இயேசுவால் நடைபெற்றது. இப்படி நான் எண்ணற்ற அற்புதங்களை சொல்லிக் கொண்டே போகலாம். அன்பரின் ஊழியத்தின் மூலமாக இயேசு செய்கிற அற்புதங்கள் அனைத்தும் அவர் நம்மேல் வைக்கின்ற பாசத்தையும், பிரியத்தையும் காண்பிக்கிறது.

மோசேயின் மீது கர்த்தர் பிரியம் வைத்தபடியால் தான் தமது மிகுந்த கிருபையினால் தமது மகிமையை அவனுக்கு காண்பித்தார் **(யாத். 33:17-23).** அதுமட்டுமல்லாமல், அவருடைய பயங்கரமான அக்கினி மகிமையின் மத்தியில் அவனை மலைக்கு வரச் சொல்லி அவனோடு இரவும் பகலும் 40 நாள் பேசினார். மேலும் அவன் நிமித்தமாக 22 லட்சம் மக்கள் கொடிய வனாந்தரத்தில் நடக்கும் பொழுது (கடுமையான சூரிய வெப்பம்) அவர்களுக்கு குளிர்ந்த மேக ஸ்தம்பமாகவும், இரவில் மின்சார விளக்குகள் இல்லாத அந்த காலத்தில் அத்தனை லட்ச மக்களுக்கும் வெளிச்சம் தரும்படி அக்கினி மயமான ஸ்தம்பமாகவும் காட்சியளித்தார். ஒன்றிரண்டு நாட்கள் அல்ல, 40 வருடமாக இந்த மகிமையின் மேகம் அவர்களை பாதுகாத்தது. எத்தனை பெரிய அற்புதம் பாருங்கள் **(எண். 9: 15-23).** இந்த பரிசுத்த தேவனின் மகிமை, மேகம் வழி தெரியாத இடத்தில் அவர்களை வழி நடத்தி சுதந்தரமான கானான் தேசத்திற்கு அவர்களை கொண்டு வருகிறது.

**செயின்ட் பேட்ரிக் என்னும் மாபெரும் தேவ மனிதன் அயர்லாந்து நாட்டை அசைத்தார். பலவிதமான மூட நம்பிக்கைகள், மந்திர தந்திர சக்திகளிலும், அரசனுடைய கொடுமையான ஆட்சியிலும் அகப்பட்டிருந்த அந்நாட்டு மக்களுக்கு இறை அன்பையும், தேவனுடைய சத்தியத்தையும் சொல்லி பலத்த அற்புதங்களை செய்து பெரிய எழுப்புதலை கொண்டு வந்தார். இதன் நிமித்தமாக ராஜாவின் பிரதான மந்திரிகளும், மந்திரவாதிகளும் அவரை கொலை செய்யும்படி கூறினார்கள். ஒரு குறிப்பிட்ட சமயத்தில் அவர்**

வனாந்தரத்தில் வெளிறி செடிகளுக்குள் ஒளிந்திருப்பதாக செய்தி வந்தது. உடனடியாக அவரை கொலை செய்யும்படிக்கு நூற்றுக் கணக்கான வீரர்களையும், பயங்கரமான செய்வினை வைக்கும் மந்திரவாதிகளையும் அவருக்கு விரோதமாக அந்த ராஜா அனுப்பினார். அந்த வனாந்தரத்தில் போர் வீரர்களும், மந்திரவாதிகளும் வெளிறி செடிகளின் மத்தியிலிருந்து அவர் வெளியே வருவார், அவருடைய குதிரையும் வெளியே வரும் அப்பொழுது அவரை கொன்றுவிடலாம் என காத்திருந்தனர். ஆனால் ஒருவரும் அந்த காட்டு செடிகளுக்குள் போகாதபடிக்கு கர்த்தருடைய அக்கினிமயமான மேகம் அதின் மீது நிழலிட்டது. அவர்களால் ஒன்றையும் பார்க்க முடியவில்லை. அவரது சத்துருக்கள் அக்கினிமயமான மேகத்தில் இறந்திருப்பார் அல்லது தப்பும்படி வெளியே வருவார் என்று நினைத்தார்கள். எனினும் அந்த செடிகளை சூழ பயங்கரமான ஆயுதங்களோடு போர் சேவகர்கள் காத்திருந்தார்கள். திடீரென்று அந்த அக்கினிமயமான மேகம் எடுபட்டு போயிற்று. சத்துருக்கள் அவரை கொலை செய்யும்படி பாய்ந்து சென்றார்கள். ஆனால் அவர்கள் **"ஒரு கலைமான் மாத்திரம் வெளியே நின்றதை கண்டார்கள்"** செயின்ட் பேட்ரிக்கை கர்த்தருடைய ஆவியானவர் தூரத்திலிருந்த மலையின் உச்சிக்கு கொண்டு போய்விட்டார். அயர்லாந்து அரசன் எத்தனையோ முறை பேட்ரிக்கை கொலை செய்ய தேடியும் ஒன்றும் வாய்க்கவில்லை. இந்த பரிசுத்தவான் அநேக மரித்தவரை உயிரோடு எழுப்பினார். இயேசு செய்த பலத்த அற்புதங்களை அவரும் செய்தார். மிகவும் தாழ்மையுள்ளவர், பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்தவர். எனவே தேவன் அந்த பரிசுத்தவானின் ஜெபத்தின்படி அவரது பிரியமான காரியங்களை வாய்க்கப் பண்ணி அயர்லாந்து தேசம் முழுவதையும் இயேசுவின் அன்பிற்கு அடிபணியும்படி செய்தார்.

ஆம் அன்பு சகோதர, சகோதரிகளே! பயந்து கொண்டிருக்கிற உங்களை சுற்றிலும் கர்த்தருடைய மகிமையின் மேகம் இந்த ஆண்டு நிழலிடும். உங்களை பாதுகாப்பார், உயர்த்துவார். உங்கள் மூலம் பெரிய அற்புதங்களை செய்வார். கர்த்தருக்கே மகிமை!



# Praise Report - துதி அறிக்கை

அன்பான தேவ பிள்ளைகளே!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்! நீங்கள் அனைவரும் அறிந்தபடி வாழ்க்கை என்பது ஒரு பஞ்சுமெத்தை அல்ல. நாம்முன்னேற முடியாதபடி பல தடைகள் நம் வாழ்வில் ஏற்படுகின்றது. பல இக்கட்டுகளிலும், துன்பங்களிலும், எதிர்பாராத விபத்துக்கள், மரண நோய்கள், வேலையின்மை, கடன் தொல்லைகள் மற்றும் பலவிதமான பள்ளங்களிலும் விழுந்து எழ வேண்டியதாகத்தான் இருக்கிறது. தாவீது என்னும் தேவ பக்தன் இதுபோன்ற பாதைகளைத் தான் கடந்து வந்தான். அவனுடைய சிநேகிதர்களே அவனுக்கு துரோகம் செய்தார்கள், கைவிட்டார்கள். பொறாமையினால் ராஜாவிடமிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் தாவீதை கொலை செய்ய தேடினார்கள். காடுகளிலும், மேடுகளிலும், குகைகளிலும் 17 வருடம் அலைந்து திரிந்தான். ஆனால் கர்த்தர் தாவீதை கைவிடவில்லை. ஒவ்வொரு இக்கட்டின் காலத்திலும் அவன் மனதார பொருத்தனை செய்து ஜெபித்தான். அதன்மூலமாக கர்த்தர் பெரிய காரியங்களை செய்தார். எனது வாழ்க்கையிலும் 16வயதிலிருந்து இந்நாள் வரைக்கும் எப்படிப்பட்ட இடையூறுகள், இல்லாமைகள், மனச்சோர்வுகள், கஷ்டங்கள், எதிர்பாராத தீமைகள், வீழ்ச்சிகள் மத்தியிலும் முன்கூட்டியே கர்த்தருக்கு பொருத்தனை செய்து அந்த பொருத்தனையை நிறைவேற்றுவதிலும், தேவனுக்கு அர்ப்பணிக்கும் அர்ப்பணிப்பிலும் ஒருபோதும் தவறமாட்டேன். மல்கியா 3:10ன் படி தேவனுக்கு தசமபாகத்தை கொடுப்பதிலும், அதற்கு மேல் ஊழியங்களுக்கு கொடுப்பதிலும் முனைந்து நிற்பேன். எனக்கு இருக்கிறதோ இல்லையோ உபாகமம் 12:1,8ன் படி கர்த்தருக்கு கொடுத்த பிற்பாடு தான் என் காரியங்களை யோசிப்பேன். இதன் காரணமாக கர்த்தர் என்னை சிறுமையிலிருந்து உயர்த்தி இன்றைக்கும் எந்த குறைவும் இல்லாமல் நடத்தி வருகின்றார். அதுபோல நீங்களும் இக்கட்டில் கர்த்தருக்கு பொருத்தனை செய்து அதை நிறைவேற்றுங்கள். அப்பொழுது கர்த்தர் நம் தேவைகளை சந்திப்பார். நம் துயரத்தை போக்குவார், நம் புலம்பலை ஆனந்த களிப்பாய் மாற்றுவார். இப்போதும் உங்கள் விசுவாசத்தை ஊக்குவிக்கும் வகையில் கீழே பொருத்தனை செய்து நிறைவேற்றியவர்கள் வாழ்க்கையில் செய்த ஒருசில அற்புதங்களை வாசிப்போம்.

## குணப்படுத்த முடியாத வியாதியிலிருந்து அற்புத சுகம்!



நான் உயர் இரத்த அழுத்தம் மற்றும் Pleural effusion என்ற நோயினால் மிகவும் கஷ்டப்பட்டேன். **இதற்காக பல்வேறு மருத்துவ சிகிச்சைகளை மேற் கொண்டு மருந்து மாத்திரைகளை உட்கொண்டும் சுகம் கிடைக்கவில்லை. எனக்கு காசநோய் ஏற்பட்டிருக்கலாம் என்று மருத்துவர்கள் சந்தேகித்தனர்.** இதனால் நான் மிகவும் மனக்கவலையடைந்து கண்ணீரோடு நாட்களை கடத்தி வந்தேன். இந்நிலையில் ஐதராபாத்தில் நடைபெற்ற அற்புத ஜெபக் கூடுகையில் கலந்து கொண்டு **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் எனது நோய் குணமாக ஜெபித்துக் கொண்டேன். **சகோதரர் ஜெபத்திற்கு பிறகு எனது சரீரத்தில் மாற்றம்**

**உண்டானது. மீண்டும் பரிசோதனை செய்ததில் காசநோய் இல்லை யென்று மருத்துவர்கள் கூறினர்.** கர்த்தர் செய்த இந்த மிகப்பெரிய அற்புதத்திற்காக அவரை துதிக்கின்றேன். SJ Saves Trust அறப்பணி களை தாங்குகின்றேன்.

**- Sis. விஜயலட்சுமி, ஐதராபாத்**

## நல்ல வேலையை அருளி எங்கள் குடும்பத்தை ஆசீர்வதித்த தேவன்!

நாங்கள் அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்த நாள் முதற்கொண்டு கர்த்தர் சகோதரருக்கு கொடுத்த ஊழியத்திற்காக அனுதினமும் ஜெபிக்கின்றோம். அதே நேரத்தில் எங்கள் எல்லா இக்கட்டின் மத்தியிலும் பொருத்தனை செய்து ஜெபிப்போம். இந்நிலையில் எனது சகோதரனுக்கும், எனது கணவருக்கும் வேலை இல்லாமல் இருந்தது. என் சகோதரன் மிகுந்த பெலவீனமாய் இருந்த படியால் எந்த வேலைக்கும் போக முடியாது. எனவே, தேவ சமூகத்தில் இருவருக்கும் வேலை கிடைத்தால் பொருத்தனை காணிக்கை அன்பரின் ஊழியத்திற்கு தருவதாக பொருத்தனை செய்தேன். **கர்த்தர் எனது பொருத்தனையை அங்கீகரித்தார். யாரும் சற்றும் எதிர்பாராத வகையில் நல்ல வேலை எனது சகோதரனுக்கு கிடைத்தது. அதுமாத்திரமல்ல எனது கணவருக்கும் அரேபியாவில் நல்ல ஒரு கம்பெனியில் வேலை கிடைத்தது. கர்த்தர் செய்த இந்த அற்புதத்திற்காக எங்கள் பொருத்தனை காணிக்கையாக ஒரு நிகழ்ச்சிக்குரிய பணத்தை ஊழியத்திற்கு தருகின்றோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**

**- Sis. ஷீலா, நெல்லூர்**

## ஆட்டிசம் பாதிப்பு இயேசுவின் நாமத்தில் நீங்கியது!

என்னுடைய பேரன் ஆட்டிசம் என்னும் நோயால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப் பட்டான். சகோதரர் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் மூலமாக கர்த்தர் கூட்டங்களில் செய்யும் அற்புதங்களை குறித்து கேள்விப்பட்டு அவர்கள் கூட்டம் ஐதராபாத்தில் நடப்பதை அறிந்து அதில் நம்பிக்கையுடன் கலந்து கொண்டோம். பேரனின் நிலையை பொறுமை யுடன் கேட்டறிந்து பேரனுக்காக சகோதரர் உருக்கமாக ஜெபித்தார்கள். பேரனுடைய போட்டோவை வாங்கி அதை போட்டோ பைல் ஜெபத் திட்டத்தில் சேர்த்து தொடர்ந்து ஜெபித்து வந்தார்கள். உங்கள அனைவருக்கும் தெரிந்தபடி ஆட்டிசம் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை களை வளர்ப்பது மிகவும் கஷ்டம். சகோதரர் அவர்கள் சொன்ன ஆலோசனையின்படி S J Saves Trust-ல் உள்ள **ஏழை பிள்ளைகளுக்கு உதவி செய்ய ஆரம்பித்தோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டார், பேரனின் செயல்பாடு களில் ஒரு பெரிய மாற்றத்தை அருளினார். அடிக்கடி சத்தமிடுவதை நிறுத்தினான், பெற்றோர்கள் சொல்லும் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தான். இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. நாளடைவில் சாதாரண குழந்தைகளை போல மாறினான்.** எங்கள் கண்ணீரை களிப்பாக்கின அற்புதத்தின் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகின்றோம்.

**- திரு. தயாராவ், ஐதராபாத்**

## தீய பழக்கங்களிலிருந்து விடுதலை தந்த அற்புதர்!

**எனது மகன் சாம்சன் தீய பழக்கங் களுக்கு அடிமையாகி தன்னை கெடுத்துக் கொண்டிருந்தான்.** நாங்கள் எவ்வளவோ புத்திமதி சொல்லியும் அவன் கேட்பதாக இல்லை. அவனிமித்தம் எங்கள் குடும்பத்தில் நிம்மதி என்பதே இல்லாமல் போனது. இந்நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்பு கொண்டு மகனின் தீய பழக்க வழக்கங்கள் மாற ஜெபித்துக் கொண்டோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டு அற்புதம் செய்தார். ஒருசில நாளில் எல்லா தீய பழக்கவழக்கங்களில்

இருந்தும் விடுதலை பெற கர்த்தர் கிருபை செய்தார். இப்பொழுது மகிழ்ச்சியுடன் திருமணமும் செய்து கர்த்தரின் பிள்ளையாய் வாழ்கின்றான். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாகிறான், பழையவைகள் ஒழிந்தன எல்லாம் புதிதாயின என்ற வேத வார்த்தை என் மகன் வாழ்வில் நிறைவேறியதற்காக தேவனை துதிக்கின்றோம். கர்த்தருக்கே மகிமை!

**- Sis. ஸ்வர்ணலதா, செகந்திராபாத்**

## அற்புதத்தின் மேல் அற்புதம் செய்த சர்வ வல்லவர்!

2019ஆம் ஆண்டு எனக்கு அதிக இரத்தப் போக்கு காரணமாக ஸ்கேன் செய்து பார்த்த போது கர்ப்பப்பையில் இரண்டு (Fibroid) கட்டிகள் இருப்பதாக மருத்துவர்கள் கூறினார்கள். **நான் அன்பரின் ஊழியத்தில் சாட்சி எழுதுவதாக பொருத்தனை செய்து ஜெபித்தேன்.** கர்த்தர் அற்புதம் செய்தார். இரண்டு கட்டிகளும் தானாகவே மறைந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! மேலும் மகனுக்கு காரில் செல்லும்பொழுது விபத்து ஏற்பட்டது. அதில் மகனுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாதபடி கர்த்தர் பாதுகாத்தார். ஒரு வருடமாக நடந்த வழக்கும் எந்தப் பிரச் சனையும் இன்றி முடிந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக எனது தங்கை கணவர் சரீரத்தில் ஏற்பட்ட பெலவீனத்தினால் மிகவும் வேதனைக்குள்ளானார். அவருக்காக ஜெப உதவி நாடினோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டு அவருக்கு ஜீவனை தந்து சுகம் பெற கிருபை செய்தார். அற்புதத்தின் மேல் அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோர்த்திரம்!

**- Sis. சரோஜா, கன்னியாகுமரி**

## மரண கட்டுகள் என்னை விட்டு விலகினது!

எனக்கு உடல் நிலை சரியில்லாமல் போய் மிகுந்த கஷ்டப்பட்டேன். மரணத்திற்கு



ஏதுவான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டேன். மருத்துவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் சரீரத்தில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. இந்நிலையில் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப மையத்தில் நடைபெறும் அற்புத ஆசீர்வாத ஜெபத்தில் கலந்து கொண்டேன். கூட்ட முடிவில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் எனக்காக ஜெபித்தார்கள். அதன்பிறகு எனது சரீரத்தில் சுகம் உண்டாக ஆரம்பித்தது. மரணக்கட்டுகள் என்னைவிட்டு விலகி பரிபூரண சுகத்தை பெற்றுக்கொண்டேன். சுகம் தந்த தேவனை துதிக்கின்றேன்.

**- Sis. கீதா, தஞ்சாவூர்**


## பல வருட திருமண தடை நீங்கியது!



எனது மகளுக்கு பல வருடங்களாக திருமண தடை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. எனது கணவர் சில வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். அவர் இல்லாத நிலையில் பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு மிகவும் கஷ்டப் பட்டு வந்தேன். இந்நிலையில் திருச்சி குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் 2017ஆம் ஆண்டு கலந்து கொண்டேன். தனி ஜெப வேளையில் சகோதரர் அவர்கள் எனது மகளுக்காக ஜெபித்து **"கலங்காதே நல்ல வேலையில் உள்ள மணமகனை கர்த்தர் மகளுக்கு கணவராக தருவார்"** என்று கூறினார்கள். **அவர்கள் சொன்னது போலவே 2018ஆம் ஆண்டு மகளுக்கு நன்கு படித்த, பெரிய உத்தியோகத்தில் இருக்கும் மணமகனை கர்த்தர் தந்தார். திருமண காரியம் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெற்றது.** எங்கள் கண்ணீரை களிப்பாக்கிய தேவனுக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. ரேவதி, தஞ்சாவூர்**

## 38 வருட பில்லிசூன்ய கட்டுகளிலிருந்து அற்புத விடுதலை!



**முப்பத்தெட்டு ஆண்டுகளாக பில்லி சூன்ய, ஏவல் ஆவிகளால் சொல்லொணா வேதனைகளை அனுபவித்து வந்தேன். வீட்டில் நிம்மதி என்பதே இல்லை.** ஒவ்வொரு நாளும் கண்ணீரில் நாட்களை கடத்தி வந்தேன். இதற்கு விடுதலையே இல்லையா என நான் ஏங்கி தவித்த நாட்கள் அநேகம். இந்நிலையில் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமையில் நடைபெறும் அற்புத ஜெப கூட்டத்தில் கலந்துகொண்டேன். அங்கு சொல்லப்பட்ட தேவ செய்திகள், வல்லமையான ஜெபங்கள் எனக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. விசுவாசத்தோடு என் வீட்டிற்கு வந்தேன். ஒரு நாள் இரவு திடிரென என் சரீரம் வேர்த்து விருவிருத்தது. **"என் அறைக்குள் தேவ தூதனை போல ஒருவர் காட்சி யளித்தார்"** அவ்வளவு தான் பல வருட போராட்டத்தின் ஆவி என்னைவிட்டு வெளியேறுவதை நான் கண்டேன். அந்த நொடியே ஒரு தெய்வீக சமாதானம் ஆட்கொண்டது. அந்த நாளிலிருந்து எனக்குள் ஒரு சந்தோஷம், எங்கள் குடும்பத்தில் பெரிய விடுதலை உண்டானது. இந்த சாட்சியை தஞ்சாவூரில் நடைபெற்ற தனி ஜெபத்தில் தேவ நாமம் மகிமைக்காக சாட்சி சொல்வதில் அதிக மகிழ்ச்சியடைகின்றேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- Sis. தெபோராள், தஞ்சாவூர்**

## 25 ஆண்டு கால தடை நீங்கி வீடு கட்டப்பட்டது!

அன்பரின் ஊழியத்தில் பல ஆண்டுகாலமாக பங்காளராக இருக்கின்றபடியால் எண்ணற்ற ஆசீர்வாதங்களை தேவனிடமிருந்து பெற்றுள்ளேன். எனினும், **சொந்த வீடு கட்டப்பட பல ஆண்டுகளுக்கு மேலாக தடையாகவே இருந்தது. எவ்வளவோ முயற்சி செய்தும் எந்த பயனும் இல்லை.** இதனால் எங்கள் குடும்பம் வாடகை வீட்டிலேயே இருக்க வேண்டிய நிலை.



இந்நிலையில் அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் நடைபெறும் குடும்ப ஆசீர்வாத ஜெபத்தில் கலந்துகொண்டு வீடு கட்டுவதில் உள்ள தடை நீங்க **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபிக்க கேட்டேன். அவர்கள் தடைகள் நீங்கும்படியாக ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு அற்புதம் செய்தார். 25 ஆண்டு கால தடை நீங்கி வீடு கட்டப்பட கர்த்தர் அநுக்கிரகம் செய்தார். இப்பொழுது அந்த வீடு பிரதிஷ்டை செய்யப்பட்டு அதில் நாங்கள் குடியேறிவிட்டோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. பானுமதி, நாமக்கல்**

## பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த அற்புதம்

நாங்கள் அன்பரின் ஊழியத்தின் பங்காளர். அங்கிள் எங்கள் ஊருக்கு எப்பொழுது வந்தாலும் நாங்கள் அவர்களுக்கு உதவி செய்வோம். அங்கிள் அவர்களையும், அவர்கள் செய்யும் ஊழியங்களையும் அதிகமாக நேசிப்போம். நானும், எனது பெற்றோரும் ஊழியத்தை எங்களால் இயன்ற அளவு தாங்குவோம். கடந்த ஆண்டு ஊரடங்கு நேரத்தில் நான் வேலை இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். மேலும் கொரோனா நோயினால் நான் தாக்கப்பட்டு மிகவும் கலங்கி, கவலைப்பட்டேன். கருப்பு பூஞ்சை என்னும் தொற்றினாலும் நான் பாதிக்கப்பட்டு அதிக வேதனையை அனுபவித்தேன். இது விஷயமாக அங்கிள் அவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் ஜெப விண்ணப்பம் அனுப்பினேன். அங்கிள் அவர்கள் என்னை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு எனது நிலையை கேட்டு கண்ணீரோடு ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டார். அடுத்தமுறை மருத்துவரிடம் சென்று பரிசோதித்த பொழுது எனக்கு வந்திருப்பது

சாதாரண சைனஸ் தான் கலங்க தேவையில்லை என்று கூறினார். கர்த்தர் மலைபோல் வந்த நோயை, பனிபோல நீங்க செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

தொடர்ந்து அங்கிள் எனது வேலைக் காகவும் ஜெபித்து, பொருத்தனை செய்யும்படி கூறினார்கள். அவர்கள் சொன்னது போலவே முதல் மாத சம்பளத்தை ஊழியப் பணிக்கு தந்து விடுவதாக பொருத்தனை செய்தேன். கர்த்தர் எனது பொருத்தனையை அங்கீகரித்தார். ஒரு சில மாதத்தில் நல்ல ஸ்தாபனத்தில், உயர்ந்த சம்பளத்தில் எனக்கு வேலை கிடைக்கும்படி தேவன் அற்புதம் செய்தார். நான் செய்த பொருத்தனையின்படி முதல் மாதசம்பளத்தை ஊழியப் பணிக்கு தருகின்றேன். ஊழியங்களை நேசித்து உதவும்பொழுது தேவன் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுகின்ற கஷ்டங்களை நீக்குகின்றார் என்பதற்கு நாங்களே உயிருள்ள சாட்சி. தேவன் செய்த அற்புதத்திற்காக அவரை துதிக்கின்றேன்.

**- சகோ. ஜோயல் சுமந்த், திருப்பதி**

## அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் அன்புள்ள நம் தேவனாகிய கர்த்தர் இயேசு ஆயிரக்கணக்கான மக்களை தம் அன்பினால் அரவணைக்கிறார்! ஆறுதல்படுத்துகிறார்! அற்புதங்களை செய்கிறார்!

**மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே என் வாயிலிருந்துபுறப்படும் வசனமும் இருக்கும்; அதுவெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்**



**- ஏசாயா 55: 10,11**

நான் கடந்த காலத்தில் கிராமத்திலுள்ள ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யும் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன். அநேக ஏழைகளை நேசித்து அவர்களுக்கு என்னால் இயன்ற உதவிகளை செய்து வந்தேன். இந்நிலையில் திடீரென்று பக்கவாதம் ஏற்பட்டு இடது பக்க கை, கால்கள் செயல்படாமல் அவதிப்பட்டேன். என்னால் எழும்பவோ, நடக்கவோ முடியவில்லை. இதற்கிடையில் தற்செயலாக நம்பிக்கை தொலைக்காட்சியை பார்க்க நேர்ந்தது. **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் அந்நேரத்தில் தேவசெய்தி கொடுத்து ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். அது எனக்கு மிகுந்த ஆறுதலாக இருந்தது. சகோதரர் அவர்கள் ஏறெடுத்த பிரார்த்தனை என்னை மிகவும் தொட்டது. ஜெபத்தில் சகோதரர் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டவராய் **"எனது நிலையை கூறி, கர்த்தர் என்னை சுகமாக்குவதாக ஜெபித்து தீர்க்கதரிசனம் கூறினார்கள்"** இது எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. ஒரு வல்லமை எனக்குள் இறங்கினதை உணர்ந்தேன். அந்த நாளிலிருந்து சுகமடைய ஆரம்பித்தேன். எழும்பவும், நடக்கவும் என்னால் இப்பொழுது முடிகின்றது. இது சகோதரர் மூலம் கர்த்தர் எனக்கு செய்த மிகப்பெரிய அற்புதமாகும். இந்த அற்புதத்தினால் எங்கள் குடும்பம் முழுவதும் இயேசுவை ஏற்றுக் கொண்டோம்.

சகோதரர் சேலம் மாவட்டத்தில் சுமார் 40 கிராமங்களில் செய்து வருகின்ற ஏழை களுக்கான அன்பின் அறப்பணிகளை குறித்து கேள்விப்பட்டேன். அதை நேரடியாக பார்க்கும்படியாக சென்றேன். அந்த கிராமங்களிலுள்ள ஏழை பிள்ளைகளிடம் அன்பாக சகோதரர் பேசுவதும், இவ்வளவு பெரிய தேவ மனுஷன் தன்னை தாழ்த்தி தன் பேரப் பிள்ளைகளைபோல அவர்களை நேசிப்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்படிப்பட்ட நற்காரியங்களுக்காக உதவி செய்ய முன் வருகின்றேன். இந்த கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில் வெகுமதிகளை தந்தார்கள். அவைகள் எல்லாம் புத்தம் புதியவைகளாக இருந்தது. சகோதரர் தமிழ்நாட்டின் அன்னை தெரஸா என்றுசொல்லும் அளவிற்குபிள்ளைகளிடம் அன்பு கூறுகின்றார்.

**- திருமதி. மணி, சேலம்**

**குறிப்பு : ஆம் எனக்கன்பானவர்களே, நீங்களும் அன்பரின் ஆறுதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் அநேக அற்புதங்களை பெற்றிருப்பீர்கள். இந்த நிகழ்ச்சியை உங்கள் உதாரணத்துவமான காணிக்கையினால் தாங்குங்கள். கர்த்தர் உங்கள் மூலம் அநேக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவார்.**



# S J SAVES TRUST
## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

**தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் ஏழைகளுடைய நியாயத்தை உண்மையாய் விசாரிக்கிற ராஜாவின் சிங்காசனம் என்றும் நிலை பெற்றிருக்கும் - நீதி. 28: 27a; 29:14**

அன்பு பங்காளர்களே! நாம் எவ்வளவு உயர்ந்தாலும் தரித்திரர்களையும், ஏழை களையும் மறக்கக்கூடாது. நாமும் ஒரு காலத்தில் அப்படிப்பட்ட நிலையிலிருந்து தான் பிறருடைய தயாளமான, தாராளமான உதவியினால் மேலே வந்தோம் என்பதை மறவாமல் முடிந்த அளவுக்கு ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும். வேதம் கூறுகிறது, **திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கரைபடாத படிக்கு தன்னை காத்துக் கொள்ளுகிறது மட்டுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாக இருக்கிறது (யாக்கோபு 1:27).** எனவே, இந்த மாபெரும் அன்பின் பணியில் எங்களோடு ஒத்துழைக்கின்ற உங்கள் அனைவரையும் இரக்கமும், அன்பும் உள்ள தேவன் அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக. உங்கள் களஞ்சியங்கள் ஏராளமாய் பெருகும், உங்கள் ஆட்டுமந்தைகளில் குறையிருக்காது. நீங்களும் உங்கள் பிள்ளைகளும் செல்லுகிற இடமெல்லாம் எல்லோர் கண்களிலும் தயவும், இரக்கமும் கிடைக்கும். எனவே இந்த அன்பின் அறப்பணியில் எப்பொழுதும் குறை வில்லாமல் பெருகுகிறவர்களாக இருப் போமாக.

யோபுவின் சரித்திரத்தை தியானித்து பார்த்தால் அவன் சிறுவயதிலிருந்தே திக்கற்ற மக்களுக்கு உதவி செய்து வந்தான் என்று பார்க்கிறோம். **(யோபு 31:16-20;32)** அவன் சிறுவயதில் கண்ட நன்மையான காரியங்கள் அவனைபின் தொடருகிறது. எனவே தான் அவனோடு தேவன் நேரடியாக பேசி தேற்றி, ஆறுதல்படுத்தி உலகத்தில் யாருக்கும் இல்லாத ஒரு மிகப்பெரிய பிரதி பலனைகொடுக்கிறார். **சங்கீதம் 90:10ன்** படி நமது நாட்கள் அதிக பட்சம் 80 அல்லது 120 வருடங்களாக இருந்தாலும் யோபுவுக்கு மட்டும் கர்த்தர் 210 ஆண்டுகளாக மாற்றுகிறார். அவன் 70ம் வயதில் கொடிய ரோகத்தை அடைந்து சாகும் தருவாய்க்கு சென்றான். கர்த்தர் அவனை சுகமாக்கி சுக வாழ்வு மீண்டும் வரும்படி அநுக்கிரகம் செய்கிறார்.

கர்த்தருடைய பெரிதான கிருபை யினால் கடந்த மாதம் நாமக்கல் மாவட்டம் சின்னமருதூர், சின்ன சோளிபாளையம், குமாரசாமிபாளையம், சேளூர் செல்லப்பன் பாளையம், சேலம் மாவட்டம் கூத்தாட்டுப் பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள நூற்றுக் கணக்கான பிள்ளைகளுக்கு முகக்கவசம், சோப், கோல்கேட், பேஸ்ட், பிரஸ், தேங்காய் எண்ணெய் மற்றும் பள்ளிக்கு தேவையான Rules Note, பென்சில், பேனா, Eraser, Pouch, Pencil Box, Geomentrybox, Natraj Ball Pen மேலும், ஊட்டசத்து மருந்துகள் புரோட்டின் பவுடர், விட்டமின் சிரப் குறிப்பாக இந்த குளிர் காலத்தில் மிக அத்தியாவசிய தேவையான போர்வை வழங்கப்பட்டது.

நமக்காக ஏழையின் கோலமாய் வந்த கர்த்தர் உங்களை அளவில்லாத ஐசுவரியத் தினால் நிரப்புவாராக. இன்னும் அநேக நோயாளிகள், திக்கற்றவர்களுக்கு உதவி செய்ய

வேண்டியிருக்கிறது. எனவே, இந்த அறப்பணி களில் நாள்தோறும் பெருகுவீர்களாக.

நீங்கள் SJ Saves Trust-ற்கு நன்கொடைகளை வங்கி மூலமாக அனுப்பும் பொழுது மறவாமல் 95004 87059 என்ற வாட்ஸ் அப்பிற்கோ அல்லது 94888 45628 என்ற அலைபேசி எண்ணிற்கு உங்கள் பெயர் மற்றும் விலாசத்தை குறுந்தகவல் (SMS) மூலமாக தெரியப்படுத்துங்கள். நீங்கள் உங்கள் விபரங்களை எங்களுக்கு தெரிவிக்காத பட்சத்தில் எங்களுக்கு நீங்கள் பணம் அனுப்பின விவரங்கள் தெரியும், ஆனால் உங்கள் பெயர், விலாசம் தெரியாத படியால் உங்களுக்கு நன்றிகடிதம் எழுதவோ, மற்ற காரியங்களை உங்களுக்கு சொல்வதற்கோ ஏதுவில்லாமல் போய் விடுகின்றது. எனவே பங்காளர்கள் யாவரும் ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

**Tamil Whats App No: 95004 87059**

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org

**எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்**



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

**நாமக்கல் மாவட்டம் சின்னமருதூர், சின்ன சோளிபாளையம், குமாரசாமி பாளையம், சேளூர் செல்லப்பன் பாளையம், சேலம் மாவட்டம் கூத்தாட்டுப் பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள பிள்ளைகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டது.**














# S J SAVES TRUST

## கிராமப்புற மருத்துவமனை பணிகள்

நீங்கள் அனைவரும் அறிந்தபடி இந்தத் திட்டம் முழுவதும் கிராம மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம். கடந்த மாதம் அநேகர் நமது மருத்துவமனையில் அட்மிட் செய்யப்பட்டு சிகிச்சை பெற்று நலமுடன் வீடு திரும்பி உள்ளனர். இன்னும் நமது மருத்துவமனை மூலம் நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் உண்டு. அறுவை சிகிச்சை அரங்கமும், பிரசவ அறையும் (Labour Room) கட்ட வேண்டியுள்ளது. வருகிற ஒவ்வொரு நோயாளிகளும் சுகத்துடன் திரும்பிப் போகவும் ஜெபியுங்கள். நாம் எப்பொழுதும் பிறருடைய நலனுக்காக ஜெபிப்போம். அப்பொழுது கர்த்தர் நம்முடைய நலனையும், குடும்பத்தினரையும் பொறுப்பெடுத்துக் கொள்வார். **"நான் வியாதியாயிருந்தேன் என்னை சுகமாக்கினீர்கள்" என்று கர்த்தர் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக "என்னை விசாரிக்க வந்தீர்கள்"** என்று கூறுகிறார். நீங்களும் நானும் சேர்ந்து இந்த காரியத்தை செய்வோமாக!

**வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள் வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள் காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்.**

**அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்**

**- மத்தேயு 25 : 34-40**

மருத்துவமனை பணிகள் தொடர்ந்து பெருகி வளரவும், நல்ல அர்ப்பணிப்புள்ள மருத்துவர்கள் இதில் இணைந்து உதவி செய்யும்படியும் ஜெபியுங்கள் கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!



## நவம்பர் மாத வேத வினா - விடை கேள்விகளுக்கான சரியான பதில்கள்

1. பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் (ரோமர் 1:23)
2. ஆகாயத்துப் பறவைகள், வழியருகே (லூக்கா 8:5)
3. எப்பிராயீம் (ஓசியா 7:11)
4. மகாபாபிலோன் (வெளி.18:2)
5. யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா (ஏசாயா 38:9,14)
6. தூதன், வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளை (வெளி.19:17-18)
7. சவுலும் யோனத்தானும் (2சாமு.1:23)
8. வெட்டுக்கிளிகள் (நீதி.30:27)
9. சுயம்பாகிகளின் தலைவன், யோசேப்பிடம் (ஆதி. 40:16-17)
10. வெட்டுக்கிளிகளுக்கு, புகையிலிருந்து. (வெளி.9:3)
11. காகத்தைப்போல் கருமை (உன்னத.5:11)
12. வெட்டுக்கிளிகளைப்போல (எண்.13:33)
13. மோவாப் தேசத்தின் குடிகள் (எரே.48:28)
14. வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும், யோவான்ஸ்நானன் (மத்.3:4)
15. ஞானம், புத்தி. யோபு 28:20-21

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

1. திருமதி. யேசுமரியாள், திருச்சி.
2. சகோதரி. யோகன்னா, அரியலூர்
3. சகோதரி. குணசீலி, தூத்துக்குடி
4. சகோ. ராபின், தூத்துக்குடி
5. சகோ. வில்சன் தர்மராஜ், தேனி

### முன் அட்டை உள்பக்கத் தொடர்ச்சி



**மூலம் செய்யும் அறப்பணிகளை குறித்தும் எழுதியிருந்தது என்னை வெகுவாய் தொட்டது. அதின்படி ஒவ்வொரு மாதமும் எங்களுடைய தசமபாகத்தை மருத்துவமனை பணிக்கு அனுப்புகின்றோம்.** கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஐதராபாத்தில் வீடு வாங்கினோம். கடுமையான மழையின் மத்தியிலும் சகோதரர் அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து புதுவீட்டை பிரதிஷ்டை செய்தார்கள். அந்த வீட்டிற்காக அதிக ஊக்கமாக ஜெபித்தார்கள். இந்த புதிய வீட்டிற்கு நாங்கள் அதிக கடன் ஒவ்வொரு மாதமும் கட்ட வேண்டியிருந்தது. அதை சகோதரர் கேட்டு தெரிந்து கொண்டு **"சீக்கிரமாக கர்த்தர் உங்கள் வீட்டுக் கடனை முடிக்க வழிவாசலை திறப்பார், உங்கள் பழைய வீடு நல்ல விலைக்கு விற்க கிருபை செய்வார்"** எனக் கூறினார்கள். அவர்கள் சொல்லிய ஒரே மாதத்தில் **எங்கள் பழைய வீடு நல்ல விலைக்கு விற்கப்பட வழி பிறந்தது. வீட்டுக் கடனும் பெரும் பகுதி தீர அந்த பணம் உதவியாக இருந்தது. எங்கள் பொருத்தனையின்படி சகோதரன் செய்யும் மருத்துவமனை பணிகளுக்கு தருவதில் அதிக சந்தோஷப்படுகின்றோம்.**

**- சகோ. கிஷோர், ஐதராபாத்**



# உலகச் செய்திகள்



அமெரிக்காவின் கென்டக்கி நகரத்திலிருக்கும் குறு நகரமான மேஃபீல்டில் சமீபத்தில் வீசிய பலத்த தொடர் சூறாவளிக் காற்றில் நிலை குலைந்து போனது. ஆறு மாநிலங்களைக் கடந்துவீசிய சூறாவளி யால் 80-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பது அந்தப் பகுதி மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

மேஃபீல்டில், உள்ளூரின் அடையாளமாக இருந்த பழைய செங்கல் கட்டிடங்கள் சூறாவளிக் காற்றில் விழுந்தன. நகர நீதி மன்றத்தின் மேற் கூரையின் ஒருபகுதியும் சேதமடைந்தது. மேலும், இரண்டு தேவாலயங்கள் சேதமடைந்தன.

சூறாவளி எச்சரிக்கை விடப்பட்டிருந்த நிலையில், அந்த நகர மக்கள் இந்த அளவுக்குச் சேதத்தைக் கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை. நகரத்தில் இயங்கிக் கொண்டிருந்த ஒரு மெழுகுவர்த்தி ஆலை சூறாவளிக் காற்றில் இடிந்து விழுந்ததில், அதில் பணியாற்றிய சுமார் 100 பணியாளர்கள் தப்பிக்க முடியாமல் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். அவர்களில் 40 பணியாளர் களை மீட்புப் குழுவினர் மீட்ட நிலையில் **"இனி யாரையும் மீட்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல"** என்று கென்டக்கி ஆளுநர் ஆண்டி பெஷார் பத்திரிக்கை யாளர்களிடம் தெரிவித்தார்.





இலங்கையை வெற்றி கொண்டதை குறிப்பிடும் வகையில் முதலாம் ராஜராஜ சோழன் காலத்தில் வெளியிடப்பட்ட காசுகளை கண்டு பிடித்த அரசுப்பள்ளி மாணவி அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறார்.

ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி அரசு மேல்நிலைப்பள்ளியில் ப்ளஸ் டூ மாணவி முனீஸ்வரி பயின்று வருகிறார். பள்ளியில் இயங்கி வரும் தொல்லியல் குழுவில் இணைந்து ஓய்வு நேரங்களில் தொல்லியல் பொருள் தேடுதல், கல்வெட்டு வாசித்துப் பழகுதல் என்று வரலாற்று ஆர்வம் வருகிறார் மாணவி.

முனீஸ்வரி சமீபத்தில் ஊருக்கு அருகில் ஆய்வுப்பணி செய்தபோது மூன்று செப்புக் காசுகளை கண்டு பிடித்துள்ளார். அதை தன் பள்ளி ஆசிரியரும் தொல்லியல் ஆய்வாளருமான ராஜகுருவிடம் காண்பித்துள்ளார். அக்காசுகளை ஆய்வு செய்த போது அவை ராஜராஜ சோழன் காலத்து ஈழ செப்புக் காசுகள் என்பது கண்டு பிடிக்கப்பட்டது. மாணவி முனீஸ்வரியின் கண்டுபிடிப்பு பற்றிய தகவல் அறிந்து பலரும் அவரை பாராட்டி வருகிறார்கள். ராமநாதபுரம் எஸ்.பி. கார்த்திக் நேரில் சென்று பாராட்டி பரிசளித்துள்ளார்.



எப்போதும் கிறிஸ்மஸ் மரங்கள் என்றால் பச்சை நிறத்தில் தான் என்று மனத்தில் பதிந்திருக்கும். ஆனால் இந்த வருடம் வெள்ளைநிறத்தில் பனிபடர்ந்தது போல இருக்கும் மரங்கள் வந்துள்ளன. கிறிஸ்மஸ் - மகிழ்ச்சியின் பண்டிகை. உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவமக்கள் கொண்டாடும் திருநாள். இறைமகனான இயேசுபிரான் மக்களின்மீது கொண்ட பேரன்பின் காரணமாக பூமியில் அவதரித்த தினம். எனவே அந்த நாளை கிறிஸ்தவப் பெருமக்கள் பெருமகிழ்வுடன் கொண்டாடுவது வழக்கம்.

டிசம்பர் மாதம் தொடங்கியதுமே உற்சாகமும் தொடங்கிவிடும். வீடுகளை சுத்தம் செய்வது, வண்ண விளக்குகளால் அழகுபடுத்துவது. இறைமகன் ஏசுவின் வாழ்வினைப் பேசும் குடில்கள் அமைப்பது, நட்சத்திரங்கள் தொங்கவிடுவது, நள்ளிரவில் இறைமகனின் வருகையைச் சொல்லி கேரல் ரௌண்ட்ஸ் என கிறிஸ்மஸ் தாத்தாவோடும் அவர் தரும் இனிய பரிசுகளோடும் குதூகலிப்பது என்று மகிழ்ச்சி மார்கழியின் பனி போல உள்ளும் புறமுமாய் பரவத் தொடங்கிவிடும்.

செகந்திராபாத்தில்

# புத்தாண்டு ஆசீர்வாத ஜெபம்

நாள் : 2022
ஜனவரி 8
சனிக்கிழமை

இடம் : YMCA ஹால்,
SP ரோடு, யசோதா மருத்துவமனை எதிரில்,
மணிக்கூண்டு அருகில், செகந்திராபாத்.

தேவ செய்தி
Dr. ஆனந்தஸ்திரா
Dr. ஜேன் ஜாஷ்வா

நேரம்
காலை 9.00 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

தொடர்புக்கு : 91770 87860 & 99445 36343


# திருநெல்வேலி ஜெபமையம்

## ஜெப மைய முகவரி

அன்பரின் ஊழிய ஜெப மையம், க.எண். 41B/2A, முதல் மாடி,
திருவனந்தபுரம் ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி.
குறிப்பு:- பாளை பேருந்து நிலையம் அருகில், LIC அலுவலகத்திற்கும் ஸ்டேட் பாங்குக்கும் இடையிலுள்ள கட்டிடத்தின் முதல் மாடி
அலுவலக அலைபேசி எண்: 94889 08328

## Employment Opportunity

## வேலை வாய்ப்புகள்

1) **Accountant**
   **B.Com., / M.Com., Graduates**
   Skills Required : Tally ERP 9 பயன்படுத்த தெரிந்தவர்கள்
2) **Prayer warriors :** Qualification +2/Any degree Born again Christian only
3) **Camera men with adequate experience**
   முன் அனுபவமுள்ள கேமராமேன்கள்
4) **Video Editors 5) Drivers**
6) **Cooks 7) House keepers**

தகுந்த ஊதியம் கொடுக்கப்படும்
Apply to : info@mojindia.org
கிறிஸ்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்

**Telugu Whats App No: 91770 87860**


APOSTOLIC AND PROPHETIC TRAINING CAMP
Date : 2022
January
12, 13, 14 & 15
Place : NASA Campus, Tuni
East Godavari Dt.
Andhra Pradesh
Speakers
Dr. AnandaStira
Dr. Jane Joshua
Contact : 91770 87860 & 99445 36343


திருச்சியில்
குடும்ப ஆசீர்வாத ஜெபம்
நாள் : 2022
ஜனவரி 29
சனிக்கிழமை
நேரம்
காலை 9.00 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை
இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18
தேவ செய்தி
Dr.ஆனந்தஸ்திரா & குடும்பத்தினர்
தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627


ஈரோட்டில்
குடும்ப ஆசீர்வாத ஜெபம்
நாள் : 2022
ஜனவரி 18
(செவ்வாய்கிழமை
அரசு விடுமுறை)
இடம் : CSI பாரிஸ் ஹால்
டெலிபோன் பவன் அருகில்,
பிரப் ரோடு, ஈரோடு.
நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 1.30 மணி வரை
தேவ
செய்தியாளர்கள்
Dr. ஆனந்தஸ்திரா
Mrs. மார்கிரேட் ஸ்திரா
தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627

## கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது - சங்கீதம் 116:15
## தீங்கு வராததற்கு முன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான்... நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள் - ஏசாயா 57:1,2
## நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன் - சங்கீதம் 112:6

என்னுடைய அன்பு தகப்பனாரும் போதகருமாகிய **Rev.Dr.A. அதிசயராஜ் ஐசக்** அவர்கள் கடந்த 2021 நவம்பர் மாதம் 20ம் தேதி தங்களுடைய உலக வாழ்வின் ஓட்டத்தை முடித்து மறுவாழ்வின் நித்திய மகிமைக்குள் பிரவேசித்து விட்டார்கள். என் தந்தை ஒரு பரிசுத்தவானாக, நீதிமானாக இயேசுவுக்காக கடைசி வரை வாழ்ந்து, அவர் கொடுத்த ஊழியத்தை நிறைவேற்றி முடித்ததற்காக கர்த்தரை துதிக்கிறேன். என் தந்தையிடம் காணப்பட்ட பல நல்ல முன் மாதிரியான பண்புகளுக்காக நான் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். என் தந்தையை பற்றி உங்களில் சிலருக்கு தெரிந்திருக்கலாம் அநேகருக்கு தெரியாதிருக்கலாம், எனவே அவர்களைப் பற்றி சில காரியங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளவிரும்புகிறேன்.

என்னுடைய தகப்பனார் **ஒரு ஜெப வீரன்,** ஜெபத்திற்கு அதிகமாக முக்கியத் துவம் கொடுத்து மிகுந்த பாரத்தோடு மற்றவர்களுக்காக ஜெபித்தவர்கள். ஆத்தும தாகம் கொண்டு அநேக உபவாச ஜெபம், முழு இரவு ஜெபம் நற்செய்தி கூட்டங்கள், பிரார்த்தனை பெருவிழாக்கள் என நடத்தி அதன் மூலம் **ஆத்துமாக்களை இயேசுவுக் காக ஆதாயம் செய்தவர்கள்.** அவர் களுடைய **தாழ்மையான மற்றும் எளிமை யான வாழ்வு ஓர் சிறந்த முன் உதாரண மாகும்.** தனக்கென்று எதையும் விரும்பின தில்லை. உலகத்தின் அனைத்து செல்வாக்கையும் மேன்மையையும் தூக்கி வீசிவிட்டு, தன்னை வெறுத்து **தியாகத்தோடு இறைபணியை செய்தார்கள்.** அவர்கள் பணிசெய்த காலத்தில் எத்தனையோ ஆலயங்கள், கட்டிடங்கள் கட்டினாலும் அதில் பதிக்கப்பட்ட எந்த கல்வெட்டிலும் தன்னுடைய பெயரை பதிக்காதவர்கள். **தனக்கு பெயர், புகழ் வருவதை எப்பொழுதுமே விரும் பாமல் வாழ்ந்தார்கள். "எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத் தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்" (சங்கீதம் 115:1)-**யே தன்னுடைய அடிப்படை வசனமாக எப்பொழுதும் சொல்லிக் கொள்வார்கள். **ஏழைகளுக்கு உதவி செய்வதிலும்,** ஊழியர்களை நேசிப்பதிலும், உபசரிப்பதிலும் மற்றும் **ஊழியங்களுக்காக தாராளமாக கொடுப்பதிலும் அவர்கள் சிறந்த பண்பாளராக திகழ்ந்தார்கள்.** தன்னுடைய வார்த்தையிலும், செயலிலும் உண்மையை நிலைநாட்டி வாழ்ந்தார்கள். மிகவும் நேர்மையாக, ஒழுக்கமாக, கடமையுணர் வோடு இறை பணியை செய்தார்கள். **நீதி நியாயத்திற்காக எப்பொழுதுமே குரல் கொடுக்க தயங்கினதில்லை. ஆவிக்குரிய**